# வலயக்கல்வி அலுவலகம் - துணுக்காய்
# முதலாம் தவணைப் பரீட்சை - 2020

**பாடம்:- தமிழ் மொழியும் இலக்கியமும்**

சுட்டெண்:....................... **தரம் - 06** **நேரம் : 02 மணி**

## பகுதி - I

**01. மிகச் சரியான விடையின் கீழ்க் கோடிடுக.**

01. "ஆழி" என்பதன் ஒத்த கருத்துச் சொல்
    1. அமுதம் 2. கடல் 3. குடம் 4. நீர்

02. "வெய்யிற் கொடுமையம்மா மேனி வியர்க்குதம்மா" இவ் வாக்கியத்திலுள்ள மேனி என்ற சொல்லின் பொருள்
    1. வியர்வை 2. வெய்யில் 3. உடல் 4. துன்பம்

03. தந்தை மகனுக்கு கடிதம் எழுதினார். இவ் வாக்கியத்தில் கடிதம் என்பதன் ஒத்த சொல்
    1. மடல் 2. ஊடகம் 3. அறிக்கை 4. தொலைநகல்

04. நாம் பிறரிடத்தில் அன்பு செலுத்த வேண்டும் இவ்வாக்கியத்தில் அன்பு என்பதன் எதிர்சொல்
    1. நேயம் 2. பாசம் 3. இன்பம் 4. வன்பு

05. குதிரை கனைக்கும் என்பது போல குரங்கு
    1. கதறும் 2. கத்தும் 3. அலம்பும் 4. உறுமும்

06.ஆண் குரங்கினை கடுவன் என்பது போல பெண் குரங்கினை எவ்வாறு அழைப்பார்
    1. குட்டி 2. பினை 3. கலை 4. மந்தி

07. தங்கத்தாத்தா என அழைக்கப்படும் புலவர் யார்?
    1. நல்லூர் சின்னத்தம்பிப்புலவர் 2. நவாலியூர் சோமசுந்தரப்புலவர்
    3. சி.வை தாமோதரம் பிள்ளை 4. மயில்வாகனப் புலவர்

08. அறுபதாவது ஆண்டு நிறைவில் கொண்டாடப்படும் விழா
    1. பொன் விழா 2. வெள்ளி விழா 3. மணி விழா 4. முத்து விழா

09. உயிர் மெய் எழுத்துக்களின் எண்ணிக்கை
    1. 247 2. 369 3. 216 4. 120

10. உயிர் நெடில் எழுத்துக்களின் தொகுதி
    1. அ, இ, உ 2. ஈ, ஊ, ஓ 3. ஏ, இ, உ 4. ஆ, உ, எ

11. பேசுவோனைச் சுட்டும் பெயர் எவ்வாறு அழைக்கப்படும்.
    1. தன்மை 2. முன்னிலை 3. படர்க்கை 4. பெயரடை

12. பின்வருவனவற்றுள் படர்க்கைப் பன்மைச் சொல்லாக அமைவது
    1. அவர் 2. நாம் 3. அவர்கள் 4. நீங்கள்

13. பாரதியார் இனிமையான பாடல்களை எழுதினார். இவ் வாக்கியத்தில் இடம் பெற்றுள்ள பயனிலை
    1. இனிமையான 2. பாரதியார் 3. எழுதினார் 4. பாடல்களை

14. உயர்திணையாக அமையும் சொல்
    1. வந்தேன் 2. வந்தது 3. நடந்தன 4. பாய்ந்தது

15. பின்வருவனவற்றுள் ஒன்றன் பாலாக அமையும் சொல்
    1. மகன் 2. பசு 3.ஆடுகள் 4. அரசன்

16. படிப்பான் என்பது எந்தக் காலத்தைக் காட்டுகின்றது
    1. நிகழ்காலம் 2. கார்காலம் 3. எதிர்காலம் 4. இறந்த காலம்

17. ஆற்று நீர் சல சல வென ஓடியது. சல சல என்பது
    1. இரட்டைக்கிளவி 2.இணைமொழி
    3. அடுக்குத் தொடர் 4. அடுக்கிடுக்குத் தொடர்

18. கறையான்கள் ................. அமைத்து வாழும். இடைவெளியில் அமைய வேண்டியது
    1. அலை 2. அளை 3. அழை 4. இலை

19. அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு என்னும் பழமொழி உணர்த்தும் கருத்து.
    1. ஒற்றுமையே பலம்
    2. அதிக ஆசை நட்டத்தில் முடியும்
    3. முயற்சி செய்தால் வெற்றி பெறலாம்
    4. அதிக ஆசை கொள்ளாதே.

20. ஏமாந்த நாய் என்ற கதையின் ஆசிரியர் யார்?
    1. பேராசிரியர் சோதி 2. பெருஞ்சித்திரனார்
    3. வேந்தனார் 4. செ. கணேசலிங்கன்

(20x 2= 40 புள்ளிகள்)

## பகுதி - II

**01. பின்வருவனவற்றுள் ஒன்றைத் தெரிவு செய்து 100 சொற்களுக்கு குறையாமல் கட்டுரை எழுதுக**

01. நான் விரும்பும் பெரியார்
02. காலைக் காட்சி
03. உடைந்த பேனாவின் சுயசரிதை
04. ஒழுக்கம் உயர்வளிக்கும்

(20 புள்ளிகள்)

**02. உமது பாடசாலையில் நடைபெறவுள்ள விளையாட்டுப் போட்டிக்கு வருமாறு வெளியூரில் உள்ள நண்பனுக்கு 50 சொற்களுக்கு குறையாமல் கடிதம் எழுதுக.**

(10 புள்ளிகள்)

**03. பின்வரும் சொற்களை வைத்து வாக்கியம் அமைக்குக.**

1. அலை
   அழை
2. இரை
   அறை
3. அலகு
   அழகு
4. பானம்
   பாணம்
5. மரம்
   மறம்

(10 புள்ளிகள்)

**04. பின்வரும் வினாக்களுக்கு விடைதருக**

1. ஈபண்டியின் பண்புகள் தருக.
2. பூனை மத்தால் அடிவாங்கக் காரணம் யாது?
3. சரி விகித உணவு என்றால் என்ன?
4. எலியும் சேவலும் என்னும் உரையாடல் பகுதியில் பங்கு கொள்ளும் பிராணிகள் எவை?
5. உடல் வளர்ச்சிக்கு தேவையான ஊட்டச்சத்துக்கள் எவை?
6. காகம் அமர்ந்து இருந்த மரம் எது?
7. மரத்தில் தொங்கிய குளவிக்கூட்டின் பெயர் என்ன?
8. சினைப் பெயருக்கு உதாரணம் 2 தருக.
9. வல்லின மெய் எழுத்துக்களைத் தருக.
10. முதலெழுத்துக்கள் எத்தனை?

(20 புள்ளிகள்)